மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்பொழுது நான் பின்தங்கிய மக்கள் நலனுக்காகப் பொறுப்பேற்றிருந்தேன். அப்பொழுது பின்தங்கிய மக்களுக்குத்தான், வருகின்ற எண்கள் மூலம் ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம் என்று அதற்காகத்தான் சொல்லியிருப்பேனே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அல்ல.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவரவர்களே, பின்தங்கிய மாணவர்களின் பெற்றோர்களின் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அரிசன நல இலாக்கா பற்றி இருக்கிறது.

THIRU V.S.S. MANI : Rules for grant of scholarship. என்று போட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் வேறே இருக்கிறார்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆண் மாணவர்களுக்கும், பெண் மாணவர்களுக்கும் ஒரே விதமான ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவது உண்மையா ? பெண்களுக்கு கொஞ்சம் அதிகப்படியான செலவு இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, ஆண்களைவிட பெண் மாணவர்களுக்கு அதிகப்படியான தொகை கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உபகாரச்சம்பளம் ட்யூஷன் பீஸ் இவைகளெல்லாம் இருவர்களுக்கும் பொதுவாகத் தான் தரப்படுகிறது. போர்டிங் கிராண்டைப் பொறுத்தவரையில், பள்ளி மாணவர்களில். ஆண்களுக்கு ரூ. 20-ம், பெண்களுக்கு ரூ. 21-ம், பெண்களுக்கு ஒரு ரூபாய் அதிகமாக, சோப்பு, சீப்பு இவைகள் வாங்கிக்கொள்வதற்காக கொடுக்கப்படுகிறது. அதைக் கூட இப்பொழுது சமீபத்தில் ரூ. 2 ஆக உயர்த்தியிருக்கிறோம். ஆண் மாணவர்களுக்கு ரூ. 1 கொடுத்திருக்கிறோம் மாதம் ஒரு முறை கிராப் வெட்டிக்கொள்வதற்காக, பெண் மாணவியர்களுக்கு அதிகப்படியாகத் தருவது நான் எற்கனவே சொன்ன அப்படிப்பட்ட செலவுகளுக்காக. எனவே, ஆண்களுக்கு ரூ. 1-ம், பெண்களுக்கு ரூ. 2-ம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

Re-organisation of Agriculture Department.

* 457 Q.—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to re-organise the Agriculture Department as recommended by the Committee on Estimates (1968–69); and

(b) if so, the stage at which the matter stands?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) வேளாண்மைத் துறை இயக்குநர் அரசுக்கு திட்டம் ஒன்றை அனுப்பியுள்ளார். இத் திட்டத்தை மதிப்பீட்டுக்குழு ஆதரித்துள்ளது.

(இ) இது அரசின் ஆராய்வில் உள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : வேளாண்மைத் துறையை சீரமைக்கவேண்டும் என்று பரிந்துரைத்த மதிப்பீட்டுக் கமிட்டியின் சீரமைப்பு யோசனைகளில் ஏதாவது இப்பொழுது அமுல் நடத்தப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே இயக்குநர் அதற்கு ஒரு திட்டம் வரையறுத்து அனுப்பியிருக்கிருர்கள். அது அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது. பரிசீலனை செய்துவிட்ட பிறகு, ஏற்றுக்கொள்ளக் கூடிய திட்டமாக இருந்தால் எவைஎவையை ஏற்றுக்கொள்வது, எவைஎவையை நீக்கிவிடுவது, எந்த வகையில், என்று பரிசீலித்த பிறகுதான் ஏற்றுக்கொள்ளப் படும்.

திரு. இல. பலராமன் : சீரமைப்பு பற்றி என்ன செய்யப்போகிறேம் என்று அரசு ஆணையிடுவதற்கு முன்னல், அதனுடைய நகலை மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்க முற்படுவார்களா ? டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பதை மாற்றி அதே படிப்பு படித்தவரை நியமிப்பது பற்றி ஏதாகிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இயக்குநர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத்தான் இருப்பார். அதை மாற்றுவது குறித்து இப்பொழுது எந்த விதமான பரிசீலனையும் இல்லை. இவைகளையெல்லாம் பற்றி முடிவு எடுத்ததற்குப் பின்னல் தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதைப்பற்றி அறிவிக்க முடியுமே தவிர, இன்னும் அரசாங்கமே அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை இல்லை, அவைகளெல்லாம் பரிசீலனையில் தான் இருக்கிறது என்று நான் சொன்னேன்.

Arrests of Naxalites in Thanjavur district

*449 Q.—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any persons were arrested in Thanjavur district (Nannilam) during May 1969 for canvassing membership for Naxalite Communists; and

(b) if so, action taken against them?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தக் கேள்வி போட்டு கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது. நக்ஸலைட்ஸ் நடமாட்டம் இப்பொழுது நாடு பூராவும் பரவி வருகிறது. நேற்று கூட தென் ஆற்காடு மாவட்டத்தில் அவர்களுடைய நடவடிக்கை இருந்திருக்கிறது. சவ்வாது மலை, கோவை, மதுரையில் கம்பம் பகுதி, ஆகிய இடங்களில் இவர்களுடைய நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. இவர்களைக் கண்காணிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் தனிப் போலீஸ் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?